36 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

ISSN 2792-1026

முக்காலமும் வென்று மூன்றாம் அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் துணிந்தெழு சஞ்சிகை

+94757000791 www.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 36 30 ஒக்டோபர் 2024 @skytamil.lk



இலங்கையிலுள்ள எல்ல சுற்றுலாத்தளம்



இலங்கையில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஸ்கை தமிழ் விருது விழா




ஜனாதிபதி ஊடக விருதுகள் 2024 விபரம்




ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு மேலும் ஓர் அரச அங்கீகாரம்!



சிறப்பு நேர்காணல்

## மர்யம் நளீமுதீன்

சட்டத்தரணி, சமூக செயற்பாட்டாளர்.

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Thuninthelu Magazine

மாதந்தோறும் | இதழ் - 36 | 30 ஒக்டோபர் 2024



sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටඩ්




**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94757000791

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே!

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.


**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) - கத்தார்

**ஸ்தாபக பணிப்பாளர்:** ஜே.எம். பாஸித்
**முகாமையாளர்:** ஹுபைப் முஸம்மில்

**பிரதம ஆசிரியர்:** எம்.எஸ்.எம்.ஸாகிர்

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் - சாய்ந்தமருது
எம்.ஆர். சப்ராஸ் - புத்தளம்

**இணையாசிரியர்கள்:**
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
முனீரா வாஹித் - பதுளை
மஜினா உமறு லெவ்வை - மாவடிப்பள்ளி
ஹப்ஸா பஹுமீர் - இறம்புக்கணை

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா - ஏறாவூர்
நிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
மொஹமட் நிப்ராஸ் - வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
எம்.எச்.எம். ஷிப்கான் - பாலமுனை
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் - அம்பாறை

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்:**
ஆஷிகா பர்சான் - கொழும்பு

**சந்தைப்படுத்தல் குழு:**
ரிப்னா ரிபாய் - மாவனல்லை
அவ்ஷபா நாகூர் - ஏறாவூர்

**சமூக ஊடக குழு:**
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
நிஹாசா நிசார் - கத்தார்

**இணையத்தள பொறுப்பாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் - அட்டாளைச்சேனை

**தொகுப்பாளர்:**
அர்சிதா அமீர் - ஓட்டமாவடி


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.


+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com




# இலங்கையில் பிரம்மாண்டமாக நடைபெற்ற ஸ்கை தமிழ் விருது விழா!

பல்வேறு துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் 2024.10.19 ஆம் திகதி, சனிக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இவ் விருது விழாவில் பிரபல ஊடக ஆளுமைகள் மற்றும் பல பிரபலங்கள் கலந்து கொண்டதுடன் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், புனானை சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக பதிவாளர் பீ.ரீ.ஏ. ஹசன், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம



ஆசிரியர் தே. செந்தில் வேலவர், மூத்த எழுத்தாளரும், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் நஜ்முல் ஹுசைன், சிறப்பு அதிதியாக இலக்கியச் செம்மல் கலாபூஷணம் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவ பணிப்பாளர் வைத்தியர் சனா, பிறை எப் எம் பிரதிப்பணிப்பாளரும் பிரபல அறிவிப்பாளருமாகிய பஷீர் அப்துல் கையூம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி, ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனின் தலைவியும்

அவுஸ்திரேலிய நாட்டின் பெண்கள் கவுன்சிலின் தலைவியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி. மர்யம் நளீமுதீன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் ஆங்கிலத்தில் புதிதாக வெளியீடு செய்யவுள்ள "The Bright" சஞ்சிகையின் லோகோ அறிமுக நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது விருதுகளை பெற்றவர்களின் பெயர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு ஹாஷிம் உமர் பௌண்டேசன் சார்பில் அதன் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் மடிக்கணினி ஒன்றை வழங்கி வைத்தமை விஷேட அம்சமாகும்.

















# மற்றுமோர் அரச அங்கீகாரத்தில் தடம் பதிக்கும் ஸ்கை தமிழ் ஊடகம்

இறைவனின் உதவியால் ஸ்கை தமிழ் ஊடகம் தற்போது இலங்கை வெகுஜன ஊடக அமைச்சில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆதரவு வழங்கி வரும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் மிக்க நன்றிகள்.




# நினைவோ ஒரு பறவை



**பாத்திமா சபா**
மூன்றாம் வருடம்
ஊடக கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

மனித வாழ்வின் உண்மைத்துவங்களையும், எதிர்மறைகளையும் தன்னுடைய எழுத்துக்களால் ஆழமாக வெளிப்படுத்தக் கூடிய உன்னதமான ஒரு கவிஞர் என்றால் அது நா. முத்துக்குமாராகத்தான் இருக்க முடியும். இவர் மறைந்தாலும் இவரின் வரிகள் இன்னும் மண்ணில் உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றது. இவரது எழுத்துக்கள் சிக்கலான சமூகப் பிரச்சினைகளைக் கூட எளிமையாகவும், துல்லியமாகவும், உள்ளார்ந்த வெளிப்பாட்டுடன் விபரிக்கும் தன்மை கொண்டது. குறிப்பாக மாந்தர்கள் தங்களது வாழ்க்கையில் சந்திக்கும் சவால்கள், மகிழ்ச்சி, துக்கம் ஆகியவற்றை ஆழமாக ஆராய்ந்து தனது ஒவ்வொரு படைப்புக்களையும் மிகவும் யதார்த்தபூர்வமாகப் படைத்துள்ளார் கவிஞர் நா. முத்துக்குமார். இவர் எழுதிய கதைகளில் மனிதர்களின் உளவியல் சிக்கல்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழில் முக்கிய கவிஞர்களில் ஒருவராகக் காணப்படும் இவரது கவிதைகளில் உள்ளதை உள்ளது போன்றே சொல்லும் போக்கு மற்றும் உரையாடல் பாங்கு, கதை வடிவில் சொல்லும் தன்மைகளை அவதானிக்க முடியும். நா.முத்துக்குமார் எழுதிய நூல்களில் இன்றும் என் நினைவில் நீங்கா இடம்பெற்ற நூலாக "நினைவோ ஒரு பறவை" என்கின்ற நூல் காணப்படுகின்றது. இந்த நூல் தமிழில் வாசகர்களின் இதயம் தொட்டு வாசகர் மனதை வெகுவாக கவர்ந்துள்ளது. குறிப்பாக இந்நூல் மனதில் உறைவதற்கும் இதயம் தொடுவதற்கும் ஏற்றவாறு

வடிக்கப்பட்ட கதை, கவிதைகள், நினைவுகள், மற்றும் உரையாடல்களின் ஓர் அழகான தொகுப்பாக இருக்கின்றது. கவிஞர் நா.முத்துக்குமாரின் "நினைவோ ஒரு பறவை" என்கின்ற நூலில் இடம்பெறும் கதைகள் ஒவ்வொன்றும் சுருக்கமாகவும், தெளிவாகவும், பயனுள்ளதாகவும் அமைகின்றன. ஒவ்வொரு கதையும் சமூகத்திற்கான ஒரு கருத்துப்பாடத்தை எடுத்துச் சொல்கின்றது. முத்துக்குமாரின் எழுத்துக்கள் உண்மைத்தன்மையை மையமாகக் கொண்டுள்ளன. கற்பனைகளைப் பயன்படுத்தாமல் நேரடியான காட்சிப்பதிவாக நினைவோ ஒரு பறவை வாசகர்களை ஈர்த்துள்ளது.

இந்த நூலில் நா. முத்துக்குமார் அவரது தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து பெரும்பாலான துயரமான, இனிய அனுபவங்களை வெளிப்படுத்துகிறார். "நினைவோ ஒரு பறவை" என்பது இழந்தவர்களை நினைவில் கொள்ளும் வகையிலும் சில கடந்த நினைவுகளையும் உள்வாங்கிக் காணப்படுகின்றது. காலத்தை மீறி மனதில் உள்ள பாசம் மற்றும் பற்றுகளைக் கடந்து செல்லும் பயணம் போன்ற கருத்துக்களைக் கொண்டு இந்நூல் காணப்படுகின்றது. மறக்க முடியாத உறவுகளை, இரவுகளை, பாசத்தை, மழலைப் பேச்சுக்களை, துக்கத்தை எல்லாம் கவிதையாக உருமாற்றுகிறது இந்த நூல். நமக்குக் தெரிந்த அனுபவங்களின் நினைவுகளைப் பறவையாக உருவகப்படுத்தும் முத்துக்குமாரின் இந்நூல் நம் மனதில் இருக்கும் நம் அனுபவங்கள் நம்மை விட்டுவிடவில்லை, எங்கேயோ பறந்து போனாலும் திரும்பிவரும். அதேபோல் நினைவுகளும் எப்போதும் நம் மனதின் ஒரு பகுதியில் பறந்து கொண்டிருக்கும் என்பதை இந்நூலின் ஊடாக வாசகர்களுக்குச் சொல்லியுள்ளார்.

குறிப்பாக இந்நூலில் முத்துக்குமாரின் எழுத்து முறையின் சிறப்பு என்பது அவரது நேர்மையான உணர்ச்சிகள் மற்றும் வார்த்தைகளின் அற்புதமான தேர்வில் தெரிகின்றது. அவரின் உரைநடையில் நம்மில் ஒவ்வொருவரும் தினமும் எதிர்கொள்ளும் சாதாரண விடயங்கள் கூட மெல்லிய கவிதையாக உருவாகின்றன. இதன் மூலம் அவர் வாசகர்களின் இதயத்தை எளிமையாகவே தொடுகிறார். அவரின் ஆழமான எண்ணங்கள் மற்றும் மன அழுத்தங்கள் அனைத்தும் அவரின் வார்த்தைகளின் வழியாக ஒரு ஆழமான தாக்கத்தை உருவாக்குகின்றன. "நினைவோ ஒரு பறவை" என்கின்ற நூலின் ஒவ்வொரு பக்கமும் ஒரு சிறு கவிதையாகவும், ஒவ்வொரு வாசிப்பும் ஒரு தனிப்பட்ட அனுபவமாகவும் மாறுகிறது. இவரது இந்நூலிலிருந்து வரும் எளிமையான உரையாடல்கள், வாசகரின் மனதில் ஒரு நெருக்கத்தை உருவாக்கும் விதமாக அமைந்துள்ளன.

குறிப்பாக ரோஜாப்பூ மிஸ் என்கின்ற பகுதியில் தனக்கு கற்றுத் தந்த ஐந்தாம் வகுப்பு ஆசிரியைக்கு எழுதிய கடிதத்தின் உள்ளடக்கத்தில் வரும், உண்மையில் பிள்ளைகளுக்குப் பிரியங்களுடன் பாடம் சொல்லித்தரும் பள்ளிக்கூட டீச்சர்களின் காதோரத்துக் கூந்தல் அலையில் ஊஞ்சல் ஆடுவதற்காகத்தான் இந்த உலகத்தில் ரோஜாப்பூக்கள் பூக்கின்றனவோ! என்கின்ற வரிகள் எல்லாம் இந்த நூலுக்கு மேலும் அழகு சேர்த்துள்ளன. அவ்வாறே

**பூ என்பது பூ மட்டுமா**
**அது ஒரு புன்னகை**
**பழைய ஞாபகத்தின் புதிய வாசனை**
**மண்ணில் உதிரும் வானவில் துண்டு**
**கடவுள் எழுதிய நாட்குறிப்பின் கடைசி பக்கம்**.

என்கின்ற வரிகள் ஒரு வாசகி என்ற ரீதியில் என் மனதை அதிகமாகத் தொட்டுச் சென்றது. நினைவுகள் எப்போதும் மனதில் புதைந்து கிடக்கின்றன. அவற்றை நாம் மறக்க முடியாது. "நினைவோ ஒரு பறவை" நூலில் முத்துக்குமார் இந்த எண்ணத்தை மிகவும் அழகாக உணர்த்துகின்றார். இது அவரது வாழ்வின் குறிப்பிட்ட தருணங்களை வெளிப்படுத்தும் ஒரு பயணம் மட்டுமல்ல; இது வாசகரின் வாழ்க்கையிலும் அவர்களைப் பற்றிச் சிந்திக்க வைக்கும் ஒரு உணர்வுப்பூர்வமான அனுபவமாகவும் அமைகின்றது. நமது நினைவுகள் எவ்வாறு நம் வாழ்க்கையிலிருந்து நம்மைத் தொடர்ந்து சிந்திக்கச் செய்கின்றன என்பதைக் கவிதை மயமான நடையில் சொல்கிறார் முத்துக்குமார். பல்வேறு நாட்கள், பருவங்கள், வெற்றிகள், தோல்விகள் என்று காலத்தின் மாற்றங்களை இந்த நூல் நம் கண்முன்னே விபரிக்கின்றது.

அத்தோடு, இந்த நூலில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் குழந்தைகள், பெற்றோர், காதல், இயற்கை, மரணம் போன்ற பல்வேறு விடயங்களின் அனுபவங்களை உணர்த்தும் வகையில் முத்துக்குமார் தனது எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார். அதனால்தான், இந்த நூல் ஒவ்வொரு பருவத்தையும் நம் வாழ்க்கையின் ஒரு முக்கியமான அத்தியாயமாகச் சித்தரிக்கின்றது. வாசிப்பின் போது

நம்மை மறந்துவிட்டு, அவரின் நினைவுகளிலும் கவிதையிலும் முழுக்க முழுக்க மூழ்கி விடுகிறோம். இதன் மூலம், அவரின் கதை மட்டுமல்ல; நம் சொந்தக் கதைகளையும் நம் கண்முன் வைத்துவிடுகிறார். இதுதான் இந்த நூலின் மிகப் பெரிய பலம்.

மேலும், இந்த நூலில் குழந்தைப் பருவம் பற்றிய கவிதைகளும் நிறையவே இருக்கின்றன. குழந்தைகள் பார்வையில் உலகத்தைப் பார்க்கும் திறனே வேறுபட்டது. முத்துக்குமார் தனது கவிதைகளில் குழந்தைகளின் ஆழமான எண்ணங்களைச் சுலபமாக வெளிப்படுத்துகின்றார். அவர் குறிப்பிடும் அனுபவங்கள் மிக இயல்பானவை. இவ்விதமான யதார்த்தமான அனுபவங்கள் நம் மனதில் பதிந்துவிடுகின்றன. இந்த நூலின் முக்கியமான அம்சம் என்னவெனில், இதன் காட்சிகள் மிக மிக இயல்பானவை. மனிதர்கள் சந்திக்கும் அன்றாட பிரச்சினைகளை மிக நேரடியாகவும் நெகிழ்ச்சியான முறையிலும் முத்துக்குமார் விவரிக்கிறார். உதாரணமாக, காதலின் வேதனை, குடும்ப உறவுகளின் நெருக்கடிகள், வாழ்வின் அசாதாரண சவால்கள் அனைத்தும் அவர் எழுத்தில் எளிமையாகவும் உணர்வுபூர்வமாகவும் பிரதிபலிக்கின்றன. இதன் மூலம், வாசகர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை அனுபவங்களை எதிரொலிக்க முடிகிறது.

சமூகத்தின் எதிர்பார்ப்புகள், யதார்த்த வாழ்வின் அனுபவங்களைத் தவிர்க்க முடியாதவையாக மாற்றுகின்றன. முத்துக்குமார் இவற்றை மிக நேரடியாகப் பேசுகிறார். ஒருவழியாக வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புகள், ஒரு சாதாரண மனிதனை எப்படி அடக்குகின்றன என்பதைக் கூறும் அவரது வரிகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. மேலும் "ஒரு பறவையின், எண்ணங்கள் எப்போதும் விண்ணில், ஆனால் அதன் துடிப்பு நிலத்தில்" என்ற வரிகள், வாழ்க்கையின் மீதான அவரது இயல்பான நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. அவ்வாறே "நினைவோ ஒரு பறவை" புத்தகத்தின் பெரும்பாலான கதைகள் மனிதரின் அன்றாட வாழ்வியல் கஷ்டங்களையும், துக்கங்களையும் வெளிப்படுத்துகின்றன. முத்துக்குமாரின் அனுபவங்கள் பொதுவாக வாழ்வின் உளவியல் சார்ந்த தருணங்களை மிக வலிமையாகப் பேசுகின்றன. "நினைவுகள், அவை பறவைகள் போல வருவன, ஆனால் அவை எப்போதும் நம் மனதில் தங்கியிருக்கும்" என்ற அவரின் வரிகள், நம் நினைவுகளின் நிலையை நமக்கு உணர்த்துகின்றன. முத்துக்குமாரின் கவிதைகள் அவர் வாழ்ந்த அனுபவங்களை மட்டுமே பிரதிபலிக்கவில்லை; தமிழின் அழகையும் மொழியின் செறிவையும் அதன் உணர்வுகள் மூலம் வெளியிடுகின்றன. அவரின் படைப்புகள் மிகுந்த இலக்கியத் திறமையுடன் எழுதப்பட்டுள்ளன. இது அவரின் கவிஞர் பெருமையை மெய்ப்பிக்கின்றது.

குறிப்பாக, இந்நூலில் கதாபாத்திரங்கள் ஒருவருக்கொருவர் இடையே உள்ள உறவுகளின் அழகு மற்றும் சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறார். அன்பு, பல நேரங்களில், மன வருந்தலுக்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆனால், அதே சமயத்தில், அது நமக்கு ஒரு புதிய திருப்பத்தை வழங்குகிறது. இந்த அனுபவங்கள் வாசகர்களை இணைக்கச் செய்யும். குடும்பம் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படையான நிலை. நூலில், குடும்ப உறவுகள் எவ்வாறு மனிதன் ஒருவனின் வாழ்க்கையை உருவாக்கும் என்பதை விளக்குகின்றது. இங்கு உள்ள அனுபவங்கள் மற்றும் கதைகள், குடும்பத்தின் ஆதரவு மற்றும் பங்கிடுதல் வாழ்க்கையை எப்படிச் செழிக்கச் செய்கின்றன என்பதைக் கூறுகின்றது. எளிய தினசரி நிகழ்வுகள், நம்மை எவ்வாறு தொலைந்து விடாமல் வைத்திருக்கின்றன என்பதையும், ஒவ்வொரு அனுபவத்திற்கும் ஓர் அர்த்தம் உள்ளதையும் எடுத்துரைக்கின்றன. வாழ்க்கை என்பது எளிய மகிழ்ச்சிகளால் ஆனது என்ற கருத்து, வாசகர்களைத் தொடக்கமாக்குகின்றது. முத்துக்குமாரின் "நினைவோ ஒரு பறவை" என்பது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களைச் சேர்ந்த ஓர் அழகிய கதை. இது வாசகர்களுக்கு பல்வேறு உணர்வுகளையும், அனுபவங்களையும் மற்றும் சிந்தனைகளையும் வழங்குகிறது. அந்த எல்லா அனுபவங்களும், ஒருவரின் வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு நொடியும் அவ்வளவு முக்கியமானது என்பதை இந்நூல் உணர்த்துகின்றது.

மொத்தத்தில் *நினைவோ ஒரு பறவை* நூல், வாசகருக்கு ஒரு மறக்கமுடியாத அனுபவத்தை அளிக்கக்கூடியது. முத்துக்குமாரின் கவிதைகள் ஓர் கண்ணீரின் வழியாக இழையோடும் வாழ்க்கை வரலாறுகளாகவும் உணரப்படுகின்றது. இந்நூலில் அவர் எழுதிய ஒவ்வொரு வரியும் வாழ்க்கையின் ஒரு உண்மைத் துணுக்காகவே தோன்றுகின்றது. ஆம்! முத்துக்குமாரின் எழுத்து பறவையைப் போலத்தான் அது வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளின் மீது பறக்கின்றது.

# மின்னிடும் பொன்மணிகள்



வழமையாகத் தஹஜ்ஜுத் தொழுகைக்கு நான்கு மணிக்கெல்லாம் எழும்பும் ஹலீமாவுக்கு அன்று எழும்ப முடியாமற் போயிற்று! பாங்கொலி கேட்டுத் திகைத்தாளவள்!

"யா அல்லாஹ்! இன்டைக்குத் தஹஜ்ஜுத் கிடைக்காமல் போயிட்டுதே!" என்று வருத்தப் பட்டுக் கொண்டாள்! பக்கத்து வீட்டுப் பரீனாவுக்கு மாவு வறுத்துக் கொடுத்து விட்டு, வீட்டு வேலைகளையும் முடித்த பின்னர் தூங்கச் செல்லும் போது நேரம் நள்ளிரவு ஒரு மணியைத் தாண்டியிருந்தது! அதனால், அசந்து தூங்கிவிட்டார் தாய் ஹலீமா! மகள் ஹனா! எழும்புங்கம்மா! "இடியப்பம் அவிக்க கொஞ்சம் உதவுங்கம்மா!" என்றார்!

எழுந்து கொண்ட ஹனா "சரிம்மா!" என்றவாறு காலைத்தொழுகைக்கு ஆயத்தம் செய்தாள்! தொழுகை முடிந்ததும், அடுப்படிக்குள் நுழைந்து தாயாருடன் இணைந்து கொண்டாள்! இரண்டு அடுப்புக்கள் எரிந்தன! உமி மரத்தூள் சேர்த்து எரிந்தது ஓர் அடுப்பு! விறகிலே எரிந்தது இன்னொரு அடுப்பு! இரண்டு அடுப்பிலும் வெந்து முடிந்தன இடியப்பங்கள் !

உரலில் இட்ட மாவைப் பிழியும் போது தன் இதயத்தில் உறைந்த வேதனைகளையும் ஹலீமா பிழிந்து விடுவாள்!

"என் கண்ணான கண்ணாளன் கண் கலங்காமற் கனிவு காட்டிவந்தான்! " "நான் வாழும் காலமெல்லாம் எனக்கு அவரோடு வாழும் பாக்கியம் கிடைக்கவில்லையே!" என ஏக்கப் பெருமூச்சு விடுவாள்! யாருக்கும் தெரியாமலே, அந்த மூச்சுடன் சேர்ந்து அவளின் வேதனை வெப்பமும் காற்றுடன் கலந்து விடும்! அவர்களது அன்றைய வேலைகள் முடியும் தருவாயில் காலை ஏழுமணியாகியது!
"மகள் ஹனா!"
"நீங்க வெளிக்கிடுங்கம்மா!"
"மிச்ச வேலைகளை நான் பார்த்துக் கொள்வேன்!" என்றார் தாய் ஹலீமா! ஹனா அவசர அவசரமாக வெளிகிட்டுப் பாடசாலைக்குக் கிளம்பினாள்! "மகன் நவாஸ்" "சபீக் மாமாட கடையிலே இடியப்பப் பார்சலைக் குடுத்துட்டுப் போங்க ராஜா!" என்றார் தாய் ஹலீமா!
"சரிம்மா தாங்க!" என்றவாறு பார்சலையும் பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு ஓடினான் ஹலீமாவின் இளையவன் நவாஸ்! வேலைகளை முடித்துக் கொண்டு தானும் ஆயத்தமாகிக் கொண்டு விரைந்தார் ஹலீமா! அந்தப் பாலர் பாடசாலையின் பொறுப்பாளர் என்ற வகையில் ஹலீமா அங்கு தனது கடமைகளைத் தொடங்கினார்!

வஞ்சகமில்லாப் பிஞ்சுகளுடன் அவளுடைய நேரம் போவதே அவளுக்குத் தெரிவதில்லை! உணமையில் அவளது மனது இன்னும் இளமையாக இருப்பதற்கு அவள் ஒரு நேசரி ஆசிரியர் என்பதும் காரணமாகும் என்பதில் ஐயமில்லை! அங்கு ஆடல், பாடல், வரைதல் போன்ற செயற்பாடுகள் மகிழ்ச்சியோடு இடம்பெறுவது வழக்கம்! மாதாந்த மாணவர் மன்றம், பெரு நாட்கொண்டாட்டங்கள், களப்பயணங்கள், வருடாந்தச் சந்தை, பரிசளிப்பு விழா போன்ற செயற்பாடுகள் திட்டமிட்டபடி மகிழ்ச்சியான செயற்பாடுகள் இடம் பெறும்! சமூகத்தில் முன்னுதாரணமாக இயங்கும் அந்தப் பாலர் பாடசாலையில் வருடா வருடம் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து கொள்வார்கள்!

இடைவேளை மணி ஒலித்ததும்,
"சுகா டீச்சர்!" "பிள்ளைகளுக்கான உணவை எடுத்துக் குடுங்க டீச்சர்!"
என்றார் ஹலீமா டீச்சர்!

சுகாவும் தன் கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தாள்! முன் பள்ளிச் சின்னஞ் சிறார்களின் வண்ணங்கள் இன்னுமின்னும் ஹலீமாவின் எண்ணங்களைச் சிறக்கச் செய்திடும்! பள்ளி விடும் நேரம் பெற்றோர்கள் வந்து, படலையடியில் நிற்பது கண்டு அந்தப் பிஞ்சுகள் மகிழ்வார்கள்! பள்ளி விட்டதும் பெற்றோரிடம் அவர்களைப் பக்குவமாய் ஒப்படைத்து விட்டு, மீதிக் கடமைகளையும் முடித்து விட்டு, ஒரு மணிக்கெல்லாம் வீடு நோக்கிப் பறந்திடுவாள் ஹலீமா!

அந்தச் சம்பவம் நடக்கும் போது, மூத்தவன் சலீம் கல்விக் கல்லூரியில் முதலாம் வருடத்திலும், இளையவன், பாடசாலையில் பத்தாம் தரத்திலும், அன்பு மகள் ஹனா ஐந்தாம் தரத்திலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர்! அன்று மனமுடைந்து போய், அடியற்ற மரமாய்க் கிடந்தாள் ஹலீமா! சொந்தமாக இல்லம் கூட இல்லை! என்றாலும், விவசாயம் செய்து வாழ்வினை மகிழ்வுடன் கொண்டு சென்றவர் தான் ஹலீமாவின் கணவர்! வயலுக்குச் சென்று அறுவடைக்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்த போதுதான் இறைவன் அவரை அழைத்துக் கொண்டான்! என்ற செய்தி கிடைத்ததும் மீளாத் துயரைத் தாங்காது, துடித்தாள் ஹலீமா!

காதலித்துக் கல்யாணம் செய்து வாழ்ந்த அவர் அடையாளமாக மூன்று முத்திரைகளை விட்டுச் சென்று விட்டார்! அவர் சென்று மாதங்கள் ஆறு கடந்தன! அவளிடம் இருந்த நகைகள் எல்லாம் கடைக்கு நகர்ந்தன! இனி விற்பதற்கு ஒன்றுமில்லை! மூன்று நேரம் என்றிருந்த உணவு இரண்டு நேரமாகியது! முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அரசுச் சம்பளம் என்று பெரிதாகக் கிடைப்பதில்லை!

"நம்ம சம்பளம் குடும்பச் செலவுக்குப் போதாது!
ஹலாலாக எதாவது வருமானம் தேட வேண்டும்!"
என்று முடிவு எடுத்தாள் ஹலீமா!

மூத்த மகன் சலீமிடம்,
"மகன் சின்னதா எதாவது உணவுப் பண்டங்கள் செஞ்சி விற்கலாமா ராஜா!"
என்று அழகாகக் கேட்டாள்!

"என்னம்மா செய்யப் போறீங்க!"

"நம்ம அப்பம், இடியப்பம், இட்லி, இப்புடி செஞ்சி விற்கலாம் தானே மகன்!"

"இப்ப காலைச் சாப்பாடு செய்றது வேலைக்குப் போறவங்களுக்குக் கஷ்டம் தானே!"

"அதனாலே நிறையப் பேர் நம்மளுக்கிட்ட வாங்குவாங்க மகன்!"
என்றாள் ஹலீமா!

பெற்ற தாய் கஷ்டப்படுவது சலீமுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை தான்!
கொஞ்ச நேரம் பதில் எதுவும் சலீம் சொல்லவில்லை!

"நீ ஒன்றும் யோசிக்காதே ராஜா!
நம்ம வறுமை போக, நாம தான் உழைக்கணும்!"
என்றவாறு பதிலை எதிர்பாராமற் குசினிக்குள் சென்றாள் ஹலீமா!

"உம்மா நீங்க கஷ்டப் படாதீங்கம்மா!
வாப்பா போன அன்றே நான் உம்மாவைக் கண் கலங்காமப் பாப்பேன் வாப்பா!
என்று, வாப்பாட்ட சொல்லிட்டேனும்மா!"
என்று மனசுக்குள் சொல்லிக் கண்ணீர் வடித்தான் சலீம்! "இனி என் தாயின் உழைப்பு ஆரம்பமாகப் போகுது! பாவம் உம்மா!" "யா அல்லாஹ்! நான் எங்க உம்மாவைக் கஷ்டப் பட விடமாட்டேன் அல்லாஹ்"! என்று சொல்லி அழுது வேதனையிற் துடித்தான்! யா அல்லாஹ்!

"எனக்கு உதவி செய்வாய் அல்லாஹ்!
என்னாலான முழு உதவியையும் நான் செய்வேன்!"
என்று திட சங்கற்பம் பூண்டான்!

ஹலீமா தன் தொழிலைச் சின்னதாகவும் நேர்த்தியாகவும் தொடங்கினாள்! காலையிலும் மாலையிலும் ஹலீமாவின் வீட்டு உணவுப் பார்சல்கள் விற்பனையாகின! தாய்க்குப் பிள்ளைகளும் சேர்ந்து உதவினர்! தங்களின் பசி போக்கவும் அந்த உணவுகள் உதவின! கிடைக்கும் வருமானம் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கு ஓரளவு போதுமாக இருந்தது!
"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!" எனும் பக்குவம் அங்கு மேலோங்கி நின்றது! அவர்கள் வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்தனர்!

சலீம் கல்லூரிப் படிப்பு முடிந்ததும், தாயாரின் தொழிலை இன்னும் கொஞ்சம் பெரிதாகச் செய்யும் வழிகளைக் கையாண்டான்! பின்னேரங்களில் தன் வீட்டுக்கு முன்னாலே அப்பம் சுட்டு விற்றான்!
தம்பியின் உயர்கல்விக்கும் உதவினான்!

காலச்சக்கரம் உருண்டது! கணவனின் பிரிவுக்குப் பின்னர் ஹலீமா, தன் வாழ்வில் இருபத்தைந்து வருட காலமாக இறைவனின் உதவி தேடி வருந்தி உழைத்து வாழ்ந்தார்! தன் செல்வங்கள் இன்று சமூகத்திற்குப் பணியாற்றுவது அவளுக்கு நிம்மதியையும் மனமகிழ்வையும் கொடுக்கின்றது! அது மட்டுமல்லாமல், அடுத்த சந்ததியான பேரப் பிள்ளைகளும் இன்று கல்வியைத் திறம்படப் பெற்றுள்ளனர்! இன்னும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்! இதற்கெல்லாம் காரணம் ஆண்டவனின் அருளும் அயராத முயற்சியும், பொறுமையுமே என்றெண்ணிடுவாள்!

உண்மையில் மூத்த மகன் சலீம், அக்குடும்பத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்தவன்! தகப்பனை இழந்த பின்னர் தாயாருக்கு ஆறுதலாய் நின்று கொண்டே தன் கல்வியைத் தொடர்ந்தவன்! கல்லூரி விடுமுறை நாட்களில் கடற்கரைக்குச் சென்று தொழில் புரிந்து கறியும் காசும் கொண்டு வருவான்! கண்மணியான தங்கை ஹனாவையும் கண் கலங்காமற் கவனிப்பான்! கைம்பெண் ஹலீமா தன் மக்களைக் கண்மணிகள் என்றே காத்து வந்தாள்! அவள் அந்தப் பொன் மணிகளின் மதிப்பையும் பெறுமதியையும் உலகில் இன்னும் உயர்த்திடவே பாடுபட்டாள்! ஐந்து வேளையும் தொழுகை பேணவும் நண்பர்களோடு அளவாகப் பழகவும் ஓய்வு நேரங்களில் புத்தகங்களுடன் உறவாடவும் அவளின் மக்கள் விரும்பினர்!

பல்வேறு சவால்களை எதிர் கொள்ளும் போதும் தகப்பன் இல்லாத குறையை அவர்கள் உணரும் போதும், தாயார் வேதனைப் படக்கூடாது! என்பதில் அவர்கள் கவனமாக இருந்தனர்! பிள்ளைகள் தகப்பன் இல்லையே என வருந்தக்கூடாது எனத் தாயும் அன்பு காட்டினாள்! மூத்தவன் சலீம் தன் சகோதரர்கள் பிழைவிடக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தார்! அரைப்பட்டினி, முழுப்பட்டினிகளைச் அவர்கள் சந்தித்த போதும் கௌரவம் பாதிக்கப் படக்கூடாது என்பதிற் கவனமாய் நடந்து கொண்டனர்! கூலி வேலை செய்தாலும் பிறரிடமிருந்து இலவசமாகப் பெறுவதைத் தவிர்த்தனர்!

"உம்மா சுஹைலா வெளிக்கிட்டாச்சு!"

"நீங்க ஒங்கட குளிசை மருந்தெல்லாம் எடுத்திட்டீகளாம்மா!"

சிந்தனை கலைந்து எழுந்தார் ஹலீமா டீச்சர்!

"எடுத்து வெச்சிட்டேன் ஹனா!
எங்கேம்மா தம்பி வந்திட்டாராம்மா!"
என்று இளைய மகன் எஞ்சினியர் நவாஸை விசாரித்தார் தாய் ஹலீமா!

"நானாவும் மதினியும் வந்திட்டாங்கம்மா!"
என்றாள் ஹனா டீச்சர்!

ஹலீமாவின் மூத்த மகன் சலீம் மாஸ்டரின் மகளுக்குப் பல்கலைக் கழகம் செல்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது! அங்கு அவளைக் கூட்டிச் செல்ல அந்தக் குடும்பம் ஆயத்தமானது!

போட்டியும் பொறாமையும் நிறைந்த இந்த உலகிலே, ஒற்றுமையாய் வாழ்ந்து, பொன்மணிகளாய் மின்னிடும் ஹலீமாவின் பிள்ளைகள் இன்று சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்!

அவர்களுக்கு இறையருளும் தாயாரின் அழகிய வழி நடத்தலும் வரங்களாய் அமைந்தன!

"தன் கண்மணிகள் கல்வியின் மூலம் மின்னிடும் பொன்மணி களாக முயன்று கொண்டிருக்கிறார்கள்! இந்நிகழ்வுகள் எல்லாம் தன் கணவனின் கனவை நனவாக்குகின்றன!" என எண்ணி ஆனந்தம் அடைந்தாள் தாய் ஹலீமா!

**யாவும் கற்பனை**



# பெண்

விடியலும் விடியட்டும்,
பெண் விடுகதைக்கும் விடை கிடைக்கட்டும்,
வானமெல்லாம் அவள் பெயரை
வானவில்லே வர்ணம் தீட்டட்டும்.

அழிந்து போக பெண் ஒன்றும் சாம்பல் இல்லை,
"அக்னி தீப் பிழம்பு."
அடக்க நினைக்காதே, அழிக்க நினைக்காதே,
அழிந்து விடுவாய்.
ஏனெனில்,
அண்டமே அதிர்ந்து கைக்கூப்பி
வணங்கும் பராசக்தி அவள்.

பெண் பூக்களை விட மென்மையானவள் தான்,
அவளை சீண்டி பார்த்தால் துருப்பிடித்த இரும்பை
விட கூர்மையானவள்.

அவள் பட்ட துன்பங்களை துயரமாக
பார்க்கமாட்டாள்,
தன்னைத் தானே செதுக்கிக் கொள்ளும்
வலிமையான உளியாகத் தான் நினைப்பாள்.

அத்துணை விருதுக்கும் தகுதியானவள்,
ஆணின் வெற்றிக்கும் இவளே துணையானவள்.
பெண்ணின்றி ஆணில்லை,
அவளின்றி ஆணுக்கே அடையாளமில்லை.

பெண்ணுக்கும் மீசை உண்டு,
வீரமும் கோபமும் பாரதியை விட அதிகம் உண்டு.
அவன் கவியில் வடிந்த அருவி அவள்,
அவன் சொல்லில் வாழ்ந்த பிள்ளை அவள்.

மரணத்தை விட கொடுமையானது இலட்சியத்தை
அடையாதது,
மரணமெல்லாம் மறுத்துப் போன ஒன்று.
மாதர் குலத்திற்கே பெருமை இன்று
மரணத்தை வென்றது,
மண்ணில் வாகை சூடியது,
இந்த பெண் நிலவானது.

**கவி வரிகள் பர்ஸானா.**

# தேடலின்

இளமைச் சிட்டாய்...
கவிச்சிட்டு எனும் நாமத்துடன்...
இலட்சிய பயணம்...
இறைவனின் உதவியுடன் தேடலின் உதயம் ...

இயற்கை தோழியாய் ...
இலட்சிய பறவையாய்...
இறைவனின் அடிமையாய்...
வாழ்வின் யதார்த்தமதை உணர்ந்து கொண்டேன்...
வாய்ப்புக்களை தேடி அலைகிறேன்...
ஈருலக வாழ்வின் பிரகாசமதனை
எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்...

வெற்றிக் கனி சுவைத்திட முனைகிறேன்...
இறைவனின் திருப்தியில் நம்பிக்கை
வைத்திருக்கிறேன்...

வீரநடையுடன்...
ஈமானிய பார்வையுடன்...
இலக்கை நோக்கி நகர்கிறேன்...

மனதினை புரிதலில் எனக்கு ஆர்வம் அதிகம்...
மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு இதுவும் ஒரு
பொக்கிஷம்...

தோல்விகள் பல சந்தித்த என் மனம்
இன்று வெற்றியின் மகிழ்ச்சியை விட
முயற்சியின்மகிழ்ச்சியை கொண்டாடுகிறது...

முயற்சி ஆயுதமாக இருக்கும் வரை தோல்வியின்
கூர்மை எமை வீழ்த்தி விடாது என்ற நம்பிக்கை
தான் என்னுள் ஊறிக் கிடக்கிறது...

இலட்சிய கனவுடன்...
சுவனத்தை இலக்காக கொண்டு...
எனது பாதங்கள்
தேடலின் பயணத்தை  துவங்குகிறது...

**கவிச்சிட்டு மடிகே மிதியால,**
**பண்டார கொஸ்வத்த,**
**குருநாகல்.**



# ஒன்றுபட்டால்

**பரமேஸ்வரன் சுதர்ஷிகா**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை**

ஆலய வாசலில் கட்டப்பட்ட மரங்கள் அனைவரையும் வருக வருக என அழைப்பது போல் அசைந்தன. என்றும் இல்லாத, ஆர்ப்பாட்டம் அலங்காரம் கண்ணை மட்டுமல்ல பார்ப்பவர் இதயத்தையும் கவர்ந்தது. ஏனெனில், அன்று கும்பாபிஷேக முதல் நாள். சுமார் ஆறு வருடங்களுக்கு மேல் எந்தவிதமான விழாவும் நடைபெறவில்லை ஆலய புனர்நிர்மாண வேலைகள் காரணமாக உற்சவம் நடைபெறவில்லை. ஊர் மக்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே காரணம் என்று கூறலாம். கும்பாபிஷேக முதல் நாள். எனவே, நானும் எனது வீட்டாரும் காலையிலேயே சென்று வேலைகளை செய்தோம்.

தோட்டத் தொழிலாளர்கள் கூட வேலைக்குச் செல்லவில்லை. ' ரமேஷ் பிரதான பூசகர் வரும் நேரம் பூஜைப் பொருட்களை சரியாக எடுத்து வை 'என சுரேஸ் கூறினார். ஆண்கள் அனைவரும் வேட்டி அணிந்து வந்திருந்தனர். 'பாய்ஸ் (boys) வேட்டி கட்டி விபூதி பூசுனா அது தனி அழகு தான்' என்று குமாரி கூறினாள். காலை ஒன்பது மணி இருக்கும் பிரதான பூசகர் ஆலயத்திற்கு வருகை தருகிறார். அவரைப் பார்த்தா சிவனைப் போல் காட்சியளித்தார். யாருடனும் அதிகம் பேச மாட்டார். மென்மையான சிரிப்பு மட்டுமே! அவர் சிரித்தால் தாமரைப் பூ விரிவதைப் போல் இருக்கும் அப்படி ஒரு தனி அழகு.

'என்னடா இவ கோயிலுக்கு பூஜை செய்ய வந்த ஐயர இப்பிடி வர்ணிக்கிறாளே... ' அப்படி நினைக்க வேண்டாம். நீங்க வந்து பார்த்து இருக்கணும் அந்த அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. பிரதம குருவுடன் மேலும் 7குருக்கள் வருகை தந்தார்கள். எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் பூஜை வெகு விமர்சையாகவும் கோலாகலமாகவும் நடைப்பெற்றது. எப்படி ஒரு பூஜையை நான் மட்டுமல்ல, நீங்கள் கூட பார்த்து இருக்க வாய்ப்பே இல்லைங்க. முதல் நாள் பூஜை நடந்து முடிந்த சந்தோசத்தில் அனைவரும் அமர்திருந்தார்கள். வந்தாரை வரவேற்று வாழவைப்பது நம் நாடு என்ற கூற்றிற்கு இணங்க அம்மாவான அம்மனை பார்க்க வந்த அடியார்களை பசியோடு அனுப்ப முடியாது. அன்னதானமும் வழங்கப்பட்டது. பந்தியில் பரிமாறுனது கூட நம்ப ஆண்கள் தான். எல்லா வேலைகளையும் செய்தார்கள். அவர்கள் செய்யும் வேலைகளை பார்த்தா நமக்கே ஆச்சரியமா இருக்கும். வேலைகள் ஒருவாறு ஓய்வடைந்து மாலை பூஜைக்கு தயாராகினார்கள் . கோவிந்தம் மணி கோபுரத்திற்கு அருகில் அமர்ந்து கொண்டார். அவரின் சிந்தனை மாறியது. ' ஏய் பிரபு எந்த மண் மூட்டையை எடு ' என்று ராஜேஷ் கூறினார். "சரி சரி வை வாறேன்" என

பிரபு கூறினார். ஆரவாரமாக மண் மூட்டைகளை எடுத்து வைத்தார்கள். ஊரில் உள்ள ஆற்றில் மண் எடுத்து ஆலயத்தின் அருகில் போட்டார்கள். ஆலய புனர்நிர்மாண ஆரம்ப கட்டம் என்றே சொல்ல வேண்டும். கும்பாபிஷேகத்திற்கு குறித்த தினத்திற்கு இன்னும் இருப்பது ஒன்பது மாதங்களே! அதற்கிடையில் வேலைகளை முடிக்க வேண்டும் என்றே கோவிந்தனின் மனதில் தோன்றியது.

ஒன்பது மாதங்களுக்குள் வேலைகளை முடித்தே தீருவேன் என்ற எண்ணம் ஒன்றே நாலாபக்கமும் கேட்டுக்கொண்டிருந்தது. கோவில் வேலைக்கு மண் எல்லாம் காசு கொடுத்து நாங்கள் வாங்கவில்லை. எல்லாம் ஆற்று மணல் தான். நம்ப பசங்க பாண், வெங்காயச் சம்பாலும் சாப்பிட்டு தான் மண் போட்டானுங்கள். ஒரு சில தினங்களுக்கு நாங்களும் சென்றோம். அதும் ஒரு சிறு சந்தோஷம் தான். அந்த கோவிந்தம் மழை வந்துட்டா போதும் மறுநாள் காலையிலே ஆறு மணிக்கே வந்து எல்லாரையும் எழுப்புவாரு. பசங்களும் எழும்பி முகம் கூட கழுவாம போயிருவாங்க. ஒரு சில நாட்களுக்கு வீட்டுக்கே போக மாட்டாரு. கோயில் கோயில் கோயில் தான். பொண்டாட்டி புள்ளைங்கள கூட தேட மாட்டாரான்னு நீங்க கேக்கலாம். 'ஆமாங்க! அது தான் உண்மை தேடவே மாட்டாரு அவருடைய மனைவி புண்ணியவதினு தா சொல்லணும், அந்த அம்மா மனசு வைக்கலனா நம்ப எல்லாருடையும் இந்த அம்மா இப்படி ஜொலிப்பாளானு தெரியல' என்று தான் சொல்லணும்.

எனக்கு தெரிஞ்ச மட்டும் நம்ப பசங்க கொஞ்சம் நஞ்சம் கஷ்டம் படலங்க, மாடாய் உழைத்தார்கள் என்றால் அதுவும் வியப்பல்ல. எப்படி ஓடாய் தேய்ந்து உழைத்தார்கள். ஆலய நிறப்பூச்சு வேலைகளையும் நம்ப பசங்க ஒன்னு சேர்ந்து தான் செய்தார்கள். நம்ப நெனச்சும் கஷ்டப்பட்டு செய்ற வேலைகளை மட்டும் தான் பய புள்ளைங்க செய்வாங்கனு. பரவாயில்லையே நிறப்பூச்சி வேலைகளையும் சரியாய் செஞ்சிருக்காங்க. அப நம்ப பசங்கள சகலகலாவல்லவர்கள் அப்படி சொன்னா கூட தப்பில்ல போல. பசங்க மட்டும் இல்ல பொண்ணுங்களும் ஒன்னா சேந்து சமைத்து வேலை செய்றவங்களுக்கு சாப்பாடு கொண்டு! போவாங்க. எல்லாம் ஊரின் ஒற்றுமையே. நாட்கள் பம்பரமாய் சுழன்றோடின. ஆலய வேலைகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளது. ஆலயத்தினுள் மாபிள் பிடிக்கும் வேலை மட்டுமே உள்ளது. கோயிலை கட்டிப்பாரு கஷ்டம் தெரியும்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க. ஒவ்வொரு பொருட்களின் விலையும் அதிகம். நினைத்தும் பார்க்க முடியாத செலவு அதிகமாகியது. குறித்த திகதியில் செய்ய முடியாமல் போகுமா? என்ற யோசனையுடன் கோவிந்தம் அமர்திருந்தார். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ' என்ற கூற்றிற்கு இணங்க அனைத்து வேலைகளும் நிறைவடைந்தது.

'துதிப்போர்க்கு வல்வினைபோம் ...' என்ற பாடல் ஒலித்தது. கோவிந்தம் சுய நினைவிற்கு வந்தார். மாலை பூஜைக்கு வேலைகளை செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டே மணி மண்டபத்தை விட்டு எழும்பினார். கும்பாபிஷேகம், எண்ணெய் காப்பு என பூஜைகள் வரிசையாக நடைபெற்றது. அடுத்து 48 நாட்களுக்கான மண்டல பூஜை ஆரம்பமானது. மக்களின் ஒத்துழைப்புடன் மண்டல பூஜைகள் கோலாகலமாக நிறைவடைந்தது. கும்பாபிஷேக முடிவில் தேர் பவணியும் நடைபெற்றது. ஊரிலிருந்து நகரம் வரை தேர் இழுத்துச்செல்லப்பட்டது. விநாயகர், வள்ளி, தெய்வானை சமேதரா முருகன் ஊர்வலம் அன்று நினைத்து பார்க்க முடியாத அளவில் மக்கள் திரள் திரளாய் அலைமோதினர். நாதஸ்வரம், மேளம், மயிலாட்டம், பொம்மலாட்டம் என ஊரே விழாக்கோலம் பூண்டது. எங்கு திரும்பினாலும் மாவிலை, தோரணமும் மனதை கவர்ந்தது. மறு நாள் காலை தேர் ஆலயத்தை வந்தடைந்தது. யாருக்கு எந்தவித களைப்பும் இல்லை. வேலைகளை பகிர்ந்து எறும்பு போல சுறுசுறுப்பாச் செய்தனர். இன்று பூங்காவனம் வழமையை விட அதிக அம்பிகை அடியார்கள் வருகை தந்திருந்தனர். அம்மாவை அலங்காரம் பண்ணி ஊஞ்சல் அமரவைத்த அழகே தனி. அம்மா நித்திரை செய்தாள். பாடல் பாடி அம்மாவை தூங்க வைத்தார் ஆலய பிரதம குரு. அன்றைய நாள் அம்மா இருந்த அழக யாராலும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அழகுனா அழகு அப்படி ஒரு அழகு. இவை அனைத்தும் எந்தவிதமான இடர்பாடுகளும் இன்றி இனிதே நிறைவடைந்தது. ஒற்றுமையாய் இருந்து வேலைகளை முடித்து தந்த நம்ப கோவிந்தம் அண்ணனுக்கு நங்கள் நன்றி கடன் பட்டிருக்கிறோம். இன்றும் யார் வந்தாலும் ஆஹா.. என்ன ஒரு கோவில் இவ்வளவு சிறிய ஊரில் எப்படி ஒரு கோயிலா? என மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு உள்ளது. இதெல்லாம் நானே சொன்னா அவ்வளவு நல்லா இருக்காது நீங்களே வந்து பாருங்க புரியும்...



# கல்லூரி நாட்கள்

அனைத்தும் அணைந்து விட்டது என
எண்ணிய போது, -
ஏன் நாங்கள் இல்லையா? என
மனமுறுகிய நாள்....

தொலைத்திட்டேன் என்ற போது- தொலைத்தது நீ
இல்லை அவர்கள் என
மனஉறுதி அளித்திட்ட நாள்.....

புதிய புதிய உறவுகள்
அறிமுகமான நாட்கள்...
காலங்கள் கடந்தாலும்
மறக்க முடியாத தருணங்கள்....
பல பல திறமைகளை
பல பல விதத்தில்
காட்ட(டிய) தருணங்கள்....

பிடித்தவர்கள், பிடிக்காதவர்களுடன்
சண்டைகள் கொண்ட நாட்கள்...
நண்பர்களுடன் கூடி ஆசிரியர்களை கலாய்த்ததும்,
அவர்களிடம் திட்டு வாங்கிய நாட்கள்...

கலங்கிய கண்களுடன் நின்ற போது,
துடைத்திட்ட கைகளை
பிரியாவிடை அளித்த நாள்....
உள்ளமது இன்றும் நினைத்து நினைத்து ஏங்கும்
அந்நாட்கள்.....
மீண்டும் கிடைத்திடாதா என
தினம் தினம் ஏங்க வைத்த அந்த நாட்கள்.....
கல்லூரி நாட்கள்... நினைத்தாலே
கண்ணீர் சிந்தும் நொடிகள்.

**பாத்திமா பின்த் சம்சுதீன்**
**(Creative_Princy)**
**தனிமையின் இளவரசியவள்**



# யதார்த்தம்

வலிகளோடு மட்டுமே வாழ்க்கை என்பது
பொய்
வலிகளும் வாழ்வில் உண்டு என்பதே
மெய்...

ஆசைப்பட்டதெல்லாம் அடைவது மட்டுமே
மகிழ்ச்சியல்ல
ஆசையான விடயங்களை பிறர்
நல்லதுக்காக விட்டுக் கொடுப்பதும்
மகிழ்ச்சியே..!

நட்புக்குள் மறைவுகளேயில்லை என்பதில்
உண்மை இல்லை
நட்புக்குள் அதிகம் மறைக்க
வேண்டியதில்லை என்பதே உண்மை ....

இனிமையானவை மட்டுமே வாழ்வில்
சுவையைத் தருவதில்லை
கசப்பானவையும் அதன் சுவையைத்
தந்துவிட்டுத்தான் செல்கின்றது...

இறந்த பின்னே உறவுகளின் மகிமை
புரிகிறது என்பது பொய்
இருக்கும் போதே காட்டும் முகசுழிப்பும்
உறவுகளைப் புரிய வைக்கிறது என்பதே
மெய்..!

**ரசியா அக்ரம்**

# பெண் ஆளுமை அறிமுகம்



## மர்யம் நளீமுதீன்

**சட்டத்தரணி, சமூக செயற்பாட்டாளர்.**

**நேர்காணல் : மஜினா உமறு லெவ்வை மாவடிப்பள்ளி.**

**01. உங்களைப் பற்றி சிறு அறிமுகம்?**

நான் மர்யம் நளீமுதீன். என்னை மரீனா மன்சூர் என்றுதான் பாடசாலை நண்பர்களும், உறவினர்களும் அழைப்பார்கள். நான் கொழும்பில் பிறந்தாலும் கல்முனை மண்ணில்தான் வளர்ந்தேன். தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறேன். என்னுடைய தந்தை முன்னாள் அமைச்சர் கலாநிதி மர்ஹூம் ஏ. ஆர். மன்சூர். தாய் சுஹறா மன்சூர். எம். எஸ். காரியப்பர் என்னுடைய பாட்டனார். எனது கணவர் Dr. எஸ். நளீமுதீன். எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியிலும், உயர் தரத்தை கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், சட்டக் கல்வியை சட்டக் கல்லூரியிலும் பயின்றேன். தற்போது சட்டத்தரணியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் (Solicitor-Aus, Attorney at Law-SL).

சட்டத்தரணியாக மாத்திரமன்றி அவுஸ்திரேலியா முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவியாகவும், ஏ. ஆர். மன்சூர் பௌண்டேஷனின் ஸ்தாபகத் தலைவியாகவும், அவுஸ்திரேலியா கலை இலக்கியசங்கத்தின் உப தலைவியாகவும் தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன.

**02. சமூக சேவையின் மீதான ஆர்வம் ஏற்படக் காரணம் என்னவாக இருந்தது?**

எனது அன்பான பெற்றோர்கள்தான் இச்சேவையில் நானும் பயணிக்கக் காரணமானவர்கள். நம்மிடம் இருப்பதை உதவி தேவைப்படுவோர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சிறு வயதிலிருந்தே சொல்லி வளர்த்தார்கள்.

"இல்லாதோருக்கு கொடுத்து உதவினால் அதில் கிடைக்கும் சந்தோசம் அலாதியானது" என என் பெற்றோர்கள் சொல்வார்கள். அவர்களின் இந்த வார்த்தைகள் நானும் இப்பயணத்தில் ஈடுபடக் காரணமாய் அமைந்தது. தந்தையின் பெயரில் ஏ. ஆர். மன்சூர் பௌண்டேஷன் அமைப்பை உருவாக்கி அதனூடாக சமூக சேவைப் பயணத்தை அரசியலுக்கப்பால் செய்து வருகிறோம்.

**03. ஏ. ஆர்.மன்சூர் என்று பெயரிடப்பட்ட பௌண்டேஷன் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இவ் அமைப்பின் நோக்கம்? அதற்கு உங்கள் தந்தையின் பெயரிடக்காரணம் என்ன ?**

எனது தந்தை மரணித்த பின்னர் 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மிகக் குறுகிய காலத்தில் இந்த அமைப்பை உருவாக்கினோம். அல்ஹம்துலில்லாஹ்..! இப்போது நிறைய சேவைகள் செய்து வருகிறோம்

கல்வி மற்றும் பெண்கள் சார்ந்த துறைகளை அடிப்படையாக கொண்டது. வறுமையால் கல்வியை மாணவர்கள் விட்டுவிடக் கூடாது. தனிப்பட்ட நபருக்கு கல்வியைக் கொடுத்தால் ஒரு சமூகமே முன்னேறும் வாய்ப்புள்ளது. எனது தனிப்பட்ட நிதியில் மக்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை இப்போது செய்து வருகிறேன்.. பாடசாலைக் கல்வியை தொடரும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சமூக விழிப்புணர்வு, பெண்கள் உரிமை, வாழ்வாதார வசதிகள், ரமழான் மாத விஷேட உதவி, அசாதாரண கால உலர் உணவு வசதிகள், குடி நீர் வசதிகள் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு, கணினி, மடிக் கணினி (லெப்டெப்) போன்றன. இதுதவிர சிறுவர்களுக்கான அறிவுசார்ந்த அறிவுச் சுடர் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என பல போட்டிகளை நடாத்தி பரிசில்களும் வழங்குகிறோம்.

எனது வாழ்க்கையில் எல்லா வகையிலும் எனக்கு உறுதுணையாக இருந்தவர் எனது தந்தை. மகள் என்ற வகையில் அவர் இழப்பு என்னை மிக்க சோகத்தில் ஆழ்த்தியது. எனது மகளிடம் என்னுடைய தந்தையின் வாழ்க்கை... அவர் சமூகத்திற்காக செய்தவைகள் பற்றி கூறினேன். அப்படியான சிறந்த தந்தைக்கு அவர் சந்தோசப்படும்படி நீங்கள் என்ன செய்தீர்கள்? என என் மகள் கேட்ட போதுதான் எனக்குள் தோன்றியது... தந்தையின் பெயரில் எந்தவித அரசியல் நோக்கமின்றி மக்களுக்கு உதவுவதற்காக ஓர் அமைப்பை உருவாக்க வேண்டுமென்று. இவ்வாறு உருவாக்கப்பட்டதுதான் இந்த ஏ. ஆர். மன்சூர் பௌண்டேஷன்.

எனது தந்தை அரசியலில் இருக்கும் போது எங்களுடன் அதிகமாக பேச அவருக்கு நேரம் கிடைத்ததில்லை. அரசியலை விட்டு ஒதுங்கிய பிறகுதான் எங்களுடன் பேசவே அவருக்கு நேரம் கிடைத்தது. என்னால் சமூகத்திற்கு செய்ய முடியாமல் போனதை என் பிள்ளைகள் நீங்கள் செய்ய வேண்டுமென்று எங்களிடம் கூறிக் கொண்டே இருப்பார். அப்படி அவர் சொன்னதால் அவரால் செய்ய முடியாததை மக்களுக்கு நாங்கள் செய்ய வேண்டுமென்று மனதில் எண்ணிக் கொண்டோம். அவர் மறைந்த பின்பு மக்களுக்காக அவர் கண்ட கனவுகள் நிறைவேறாமல் போனதை எங்களால் முடிந்தளவு செய்ய இந்த பௌண்டேஷனை உருவாக்கினோம்.









**04. உங்கள் சமூக சேவைப் பயணம் உள்நாட்டில் மாத்திரமா? அல்லது சர்வதேச ரீதியிலும் தொடர்கிறதா?**

அவுஸ்திரேலியா, குவைட் போன்ற பல நாடுகளில் செய்து வருகிறோம். அவுஸ்திரேலியாவில் அவுஸ்திரேலியா பெண்கள் கவுன்சிலினால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தேவையுடைய அகதிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் தயார் செய்து வழங்குகிறோம். வெளிநாட்டில் கல்வி பயிலும் சில மாணவர்களுக்கு கற்பதற்கான வசதிகளையும் முடிந்தளவு செய்கிறோம்.

மேலும், அவுஸ்திரேலியா கலை இலக்கிய சங்கத்தினால் எமது நாட்டவர்களின் படைப்புகளை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தி அவர்களுக்கான வாய்ப்புகளை அமைத்துக் கொடுப்பது. இது சம்பந்தமாக பல இலக்கிய கூட்டங்கள், அரங்கங்கள், கலை நிகழ்வுகள் என்பன மாதம் தோறும் நடாத்தி வருகின்றோம்.

**05. சமூக சேவைப்பயணத்தில் நீங்கள் உள ரீதியாக உணர்ந்த மாற்றங்கள் இருப்பின் கூறுங்களேன்....?**

சொல்ல முடியாத ஒரு திருப்தி உள்ளத்தில் ஏற்பட்டது. நம்மிடம் இருப்பதை நம்மால் முடிந்தளவு கொடுத்து அதில் அவர்களுக்கு பயன் கிடைக்கின்றதென்றால் அதைவிட சந்தோசம் வேறொன்றுமில்லை. பூரணமான மனத்திருப்தி கிடைக்கின்றது. இது இறைவன் தந்த பாக்கியம் என்றுதான் சொல்வேன்.

**06. குடும்பத் தலைவியாக, சட்டத்தரணியாக மாத்திரமன்றி, சமூக சேவைப்பயணத்திலும் பயணிக்க நேரத்தை எவ்வாறு தயார்படுத்துகின்றீர்கள்?**

எங்களது தந்தை நேரமுகாமைத்துவத்தை எங்களுக்கு பழக்கித் தந்துள்ளார். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலைகளை செய்வதற்காக எங்களை பழக்கப்படுத்தினார்.

"அதிகாலை எழும்பி சுபஹ் தொழுது விட்டு ஒரு வேலையை சந்தோசமாக செய்தால் அன்றைய முழு நாளையும் நீ வெற்றிகரமாக முடிப்பாய்" என்று எனது தந்தை தினமும் கூறுவார். நான் ஒரு தாயாக, சட்டத்தரணியாக, சமூக சேவைப் பயணம் என இவற்றையெல்லாம் தொடர்வதற்கு நேர முகாமைத்துவத்தை முறையாக கடைப்பிடிப்பதால்தான் முடிகிறது.

**07. தற்போது பயணிக்கும் துறைகள் தவிர்த்து வேறு துறைகளில் ஈடுபாடு உண்டா?**

இலக்கியத் துறையை மிகவும் பிடிக்கும். நான் பெரிதாக எதுவும் எழுதியதில்லை. ஆனால், பாடசாலை காலத்தில் குறுங்கதைகள் எழுதியுள்ளேன். எனது கணவர் ஒரு வைத்தியராக மட்டுமன்றி, கவிஞராகவும் உள்ளார். நான் அவரின் ரசிகை. வாசிப்பின் மீது அதிக ஆர்வம். ஒரு புத்தகம் ஒன்றையும் தொகுத்துள்ளேன்.

**08. இப் பயணத்தில் விருதுகள் கிடைத்திருப்பின் கூறலாமே...**

நான் பெரிய விருதாக நினைப்பது குவைத் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்பட்ட உயரிய விருது. அவர்கள் இலகுவில் விருதுகள் வழங்கமாட்டார்கள். என்னை அவர்கள் கௌரவப்படுத்தியதை எனக்குக் கிடைத்த பெரிய விருதாக நான் பார்க்கிறேன்.

குவைத் தூதுவராலயத்தில் பணியாற்றும் போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களின் உரிமை மீறல்கள் சம்பந்தமான வழக்குகளை நான் தொடர்ந்து இருக்கின்றேன். அவர்களின் நிலைகளை, மனக்குமுறல்களை சில சஞ்சிகைகளில் எழுதியுள்ளேன். இதனால் அன்று எமது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் விசேட பாராட்டினையும், விருதினையும் பெற்றுள்ளேன்.

கல்வி பயிலும் காலங்களில் பேச்சுப் போட்டி, விவாதப் போட்டிகளில் பங்குபற்றியதால் சட்டக் கல்லூரியில் பல விருதுகள் கிடைத்திருக்கின்றன. "கிழக்கின் மகள்" என்ற நாமத்தை இலங்கை பெண்கள் அமைப்பு சூட்டியது.

அண்மையில் ஸ்கை தமிழ் ஊடகத்தினால் நடாத்தப்பட்ட ஸ்கை தமிழ் விருது விழாவில் சிறந்த சமூக சேவையாளருக்கான விருது வழங்கி என்னை கௌரவித்தார்கள்.

**09. சமூக சேவைப் பயணத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறமுடியுமா?**

நான் நிறைய சவால்களை, நிறைய இடர்களை சந்தித்திருக்கின்றேன். ஓர் ஆண் இச்சேவையில் ஈடுபடுவதற்கும் ஒரு பெண் ஈடுபடுவதற்கும் என்னைப்



பொறுத்தவரையில் சில வித்தியாசங்கள் உள்ளன. ஆனால், எனது தந்தை தந்த ஊக்கமும் தைரியமும் என்னை சவால்களைக் கடந்து செல்வதற்கு உறுதுணையாய் இருந்தன. பௌண்டேஷன் மூலம் பல இடர்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த சேவை எனது தந்தை அரசியல்வாதி என்பதால் அரசியலுக்காகத்தான் என்றெல்லாம் அவர்களாகவே பேசிக்கொள்வார்கள். பேசுபவர்கள் பேசிக் கொண்டுதான் இருப்பார்கள். விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். நாம் நமது பாதையில் சென்றால் மற்றவற்றை யோசிக்க நேரமிருக்காது. இறைவன் எதை நாடுகின்றானோ அதுதான் எமது வாழ்வில் நடக்கும்.

**10. பல துறைகளில் முன்னேற வேண்டுமென்று நினைக்கும் சில பெண்கள் சமூகம் என்ன சொல்லி விடுமோ என்ற அச்சத்தால் வீட்டில் முடங்கி இருப்பார்கள். அப்படியான பெண்களுக்கு ஏதேனும் கூற விரும்புகின்றீர்களா ?**

இலட்சியங்களை அடைய நினைக்கும் போது பல தடைகள், விமர்சனங்கள் வரும். அதற்காக நாம் ஒருபோதும் பிறருக்காக வீட்டில் முடங்கிக்கிடக்கக் கூடாது. நாம் பிறருக்காக எமது இலட்சியங்களை புதைத்துக் கொண்டிருந்தால் எம்மை விமர்சிப்பவர்களுக்கு நாம் வெற்றியை கொடுக்கின்றோம். விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். எமது எண்ணம் தூய்மையாக இருந்தால் சரி. விமர்சிப்பவர்கள் ஒருகால கட்டத்தில் ஓய்ந்து போய் விடுவார்கள். பிறரது விமர்சனங்களுக்கு பயந்து நாம் வாழக்கூடாது. நமது பாதை சரியாக இருந்தால் பயணம் சிறப்பாக முடியும்.

**11. உங்கள் பௌண்டேஷனினால் சமூகத்திற்கு செய்ய விரும்பும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

பெண்களின் சுய தொழில்களை மேம்படுத்துவது. இப்போது இந்த திட்டத்தைத்தான் ஒவ்வொரு ஊராகச் சென்று மேற்கொண்டு வருகிறோம். இன்றைய பெண்களிடம் திறமை இருக்கின்றது. அதற்கான வழிகாட்டல், உதவி இல்லை. அதைத்தான் இப்போது செய்து வருகிறோம்.

**12. இறுதியாக ஏதேனும் கூற விரும்புகின்றீர்களா?**

முதலில் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். அவன் நாட்டமின்றி எதுவும் என்னால் செய்ய முடியாது. மற்றது எனது பெற்றோர். மறைந்த என் தந்தை எனது சிறகுகளை வெட்டாமல் நான் சிறந்த முறையில் சுதந்திரமாக பறப்பதற்குக் கற்றுக் கொடுத்தவர். நான் இந்த நிலையில் இருப்பதற்கு எனது அன்பான கணவர் மற்றும் என் பாசம் நிறைந்த பிள்ளைகளின் ஒத்துழைப்பும் ஊக்கமும் பெரும் பங்களிப்பாக இருக்கின்றது, இப்போது என்னோடு இருக்கும் எனது பௌண்டேஷன் குழு எனக்கு பக்கபலமாக இருப்பதோடு நான் ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்தாலும் எனது எண்ணங்களுக்கு வடிவம் கொடுப்பவர்கள். எந்த சுயநலமுமில்லாத எனது பௌண்டேஷன் குழுவிலுள்ளவர்களுக்கும் எனக்கு துணையாக இருந்தவர்களுக்கும் இந்த நேர்காணலை செய்த மாவடிப்பள்ளியைச் சேர்ந்த சகோதரி மஜினா உமறு லெவ்வை அவர்களுக்கும் துணிந்தெழு சஞ்சிகை குழுவினர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றியைக் கூறி, இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.





# இலங்கையிலுள்ள எல்ல சுற்றுலாத்தளம்



எழுத்தாக்கம்:
லி.சிவகஜன்

எல்ல என்ற நகரம் இலங்கையில் மலையக நகரமான பண்டாரவளைக்கு அருகில் அமைந்துள்ளது. எல்ல நகரம் பதுளை மாவட்டத்தில் ஊவா மாகாணத்திலேயே ஒரு சிறிய நகரமாகும். எல்ல நகரம் ஆனது சுற்றுலா தளமாக திகழுவதற்கான காரணம் இங்கு அதிகமான மலைத்தொடர்கள். மழைக்காடுகள். அத்தோடு, தேயிலைத் தோட்டங்களும் சூழ்ந்து காணப்படுவதால் ஆகும். இந்த எல்ல நகரம் மலையகத்துக்கு இயற்கையால் வழங்கப்பட்ட ஒரு பரிசாகத் தான் கூற வேண்டும். இங்கு உள்ளூர் சுற்றுலாப்பயணிகளும் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் வருகை தருகின்றனர். இது கொழும்பு - பதுளை பாதையில்; அமைந்துள்ளது. இந்த எல்ல நகரத்தில் உள்ள சுற்றுலாத்தளங்கள் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

முதலாவதாக தோவ விகாரையை பற்றி பார்ப்போம். இது மிகவும் பழமையான கல் விகாரை ஆகும்.இது பண்டாரவளைக்கு அருகில் உள்ளது.இதன் வரலாறு கி.மு முதலாம் நூற்றாண்டில் வலகம்பா மன்னரால் தென்னிந்திய படையினர் அநுராதபுர ராசதானிக்கு படையெடுத்த போது அடைக்களத்திற்காக இங்கு கட்டப்பட்டது.இந்த விகாரை 2000 வருடங்கள் பழமைவாய்ந்தது.தோவ விகாரையில் 12 மீட்டர் அகலமான (38 அடி ) உயரமான கட்டி முடிக்கப்படாத புத்தரின் சிலை ஒன்றும் உள்ளது.

அடுத்து எல்ல கற்பாறை மலையை பற்றி பார்ப்போம்.இதன் உயரம் 1141மீட்டர் (3743அடி) உயரமாகும்.இதற்கு நடை பாதையில் செல்வோமாக இருந்தால் 8 கிலோமீற்றர் ஆகும். இது ஒரு நல்ல உடற்பயிற்சியை கொடுக்கும்.காடுகள் மத்தியில் செல்வது நல்ல அனுபவத்தை கொடுக்கும்.மேலே சென்றவுடன் கற்பாறையில் இருந்து பார்க்கும் போது அழகிய காட்சியினை காணக்கூடியதாக இருக்கும். அடுத்து சிறிய சிவனொலிபாதமலை பற்றியதாகும்.இது 1141 மீட்டர்(3743 அடி) உயரமானது. இது எல்ல நகரத்தில் தென்கிழக்காக அமைந்துள்ளது. இது எல்லயின் சிறிய மலைத்தொடராகும். அடுத்து கித்தல் எல்ல நீர்வீழ்ச்சியானது 23 மீட்டர் உயரமானது.இது கித்தல் எல்ல புகையிரத நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ளது. இது மழைக்காலத்தில் பனி அரசியை போல காட்சியளிக்கும் கோடைக்காலத்தில் சுடு நீர் போல சற்று; சூடாக இருக்கும். முக்கியமான நீர்வீழ்ச்சியான ராவணா எல்ல இது இலங்கையிலேயே அகலமான நீர்வீழ்ச்சியாகும். இது 25 மீட்டர் (82 அடி) அகலம் ஆகும்.இதில் ராமனுடைய அரசி சீதை நீராடியதாக கூறப்படுகிறது. அடுத்து ராவணா குகை இது 11 கிலோமீற்றர் (7 மீற்றர்) பண்டாரவளையிலிருந்து.

இது 25000 வருடங்கள் பழமை வாய்ந்தது. இந்த குகையின் வரலாற்று கதையாக இராமாயணத்தில் ராவணா சீதையை கடத்தி கொண்டு வந்து மறைத்து வைத்த இடமாகும். மற்றும் ராவணன் 'ராவணஅதா' என்ற இசைக்கருவியை வாசித்த இடமாகவும் கூறப்படுகிறது. அடுத்து ஒன்பது வளைவு பாலம் தெமோதரையில் அமைந்துள்ளது. இது அப்பு ஆமி என்பவரால் 1923 இல் நிர்மாணிக்கப்பட்டது. இந்த பாலத்தில் ஒன்பது வளைவுகள் காணப்படுகின்றன. இறுதியாக நில் திய பொகுன என்ற குகையானது ராவணனால் கட்டப்பட்டது என கூறப்படுகிறது. இது கரந்தகொல்லயில் உள்ளது. இது ஒளி படும் போது நீரின் நிறமும் மாறுபடும்.

# குறுஞ்செய்தி



**லிங்கம் சிவகஜன் - தியத்தலாவை**

உயர்தரம் கற்பதற்காக லாலா புதுப் பாடசாலை ஒன்றில் சேர்ந்து கொண்டாள். அங்கு காணும் முகங்கள் யாவும் அவளுக்கு புதிதாகவே தென்பட்டன. திகைத்துப் போய் நின்றவளுக்கு ஆறுதலாய் ஒரு குரல் கேட்டது. "நீங்கள் லாலா தானே என்னை தெரியுமா?" தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "இல்லை" என்று பதில் அளித்தாள். "எனது பெயர் சோபி, உங்கள் அண்ணன் எனது அண்ணாவின் நண்பன்" என்று கூறியவளாக சோபி லாலாவின் கையைப் பிடித்தாள்.

எதற்கும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறேன்." என்று சொல்லி வகுப்பறைக்கு அழைத்துச் சென்று அனைத்து நண்பர்களிடமும் அறிமுகப்படுத்தினாள்.

நாட்கள் பல உருண்டோடின. வகுப்பில் உள்ள முகிலன் லாலாவின் நெருங்கிய நண்பனாக மாறினான். கதைப்பது, சிரிப்பது, கை குலுக்கி மகிழ்வது, துண்டுச் சீட்டுக்கள் பரிமாறுவது என்று தமது நட்பை வலுப்படுத்திக் கொண்டவர்களின் மனதில், காதலும் குடி கொண்டது.

லாலா அவனைக் காதலித்தாலும் தனது குடும்பத்தை எண்ணி பயந்தவளாக அதனை மறுத்து அவனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். இதனைப் பயன்படுத்திய தினேஷ் லாலாவின் மனதில் இடம் பிடிக்க வேண்டுமென்ற அவாவில் முகிலனை பற்றி தவறான எண்ணங்களை லாலாவின் மனதில் புகுத்தி, அவளின் மனநிலையை மாற்றினான். லாலாவும் முகிலனை வெறுப்பேற்ற தினேஷிடம் நன்றாக பழகி வந்தாள். ஒரு சில மாதங்களின் பின் அவளின் நடத்தையை தவறாகப் பேசிய சமூகத்தை எண்ணி வெட்கித் தலை குனிந்தாள். எல்லா நட்புக்களையும் துண்டித்து தனிமைப் பாதையில் உயர்தரப் பரீட்சையை எழுதி முடித்தாள்.

பெறு பேறும் வெளியாகி முகிலன் பல்கலைக்கழகம் தெரிவாகினான். நன்றாக படித்து வந்த லாலா உறவுகளின் நம்பிக்கையை உடைத்தெறிந்தாள். உறவுகளின் வார்த்தைகளைக் கேட்க முடியாமல் அழுது புலம்பினாள். தன்னில் ஒரு திட உறுதியை உண்டாக்கியவளாகப் படித்தாள். இரண்டாவது தடவை பரீட்சை எழுதி சிறந்த பெறுபேற்றைப் பெற்று கல்வியற் கல்லூரிக்கு தெரிவாகினாள்.

திடீரென ஒரு நாள் 2 வருடங்கள் கழித்து முகிலனின் பிறந்த தினம் அவளுக்கு நினைவு வந்தது. ஓடி சென்று தொலைபேசியை எடுத்து குறுஞ்செய்தியில் வாழ்த்தினை அனுப்பி வைத்தாள். பதிலுக்காகவும் காத்திருந்தாள். "நீங்கள் யார்?" என்று வந்த பதிலைப் பார்த்துக் கவலை அடைந்தாள். தன்னை "லாலா" என அறிமுகம் செய்து அடிக்கடி குறுஞ்செய்தி அனுப்பினாள். அவனும் லாலாவின் குறுஞ்செய்திக்காக காத்திருந்து பதிலளித்தான்.

நாட்கள் பல நகர்ந்து 8 வருடங்களாக மனதில் புதைத்து வைத்திருந்த காதலும் மலர்ந்தது. இருவர் கரமும் இணைந்து இல்லறமும் செழித்தது.

# அவள்...

புத்தகம் படிப்பது போல்
பாவனை செய்து
புகைப்படங்கள் எடுத்து
காட்சிப்படுத்துபவர்களுக்கு
மத்தியில்...,
அவள்...
புத்தகத்திலேயே புதைந்து கிடக்கிறாள்...!
அவள் புத்தகம் வாசிப்பவளல்ல...!
புத்தகத்திலேயே
வசிப்பவள்...!

யார் யாரோ எழுதிய புத்தகங்களில்
தன்னையே தொலைத்து
பல நூறு பக்கங்களைப் புரட்டிக் கொண்டு....
மணிக்கணக்கில்...,
அதனுள்ளே...
மெய் மறந்து கிடப்பவள் அவள்...!

சில வருத்தங்களைத் திருத்த நினைக்கவும்....
சில நிறுத்தங்களைக் கொண்டு வரவும்.....
இப் பனுவல்களே அவளுக்கு கைம்மருந்தாகின்றன...!

கிடைக்கின்ற நேரங்களில் எல்லாம்...
கிடைக்கின்ற கிளைகளை நாடும் பறவைகள் போல...
இவளும்...
கிடைக்கின்ற நேரங்களில்...
கிடைக்கின்ற புத்தகங்களுடன்... சிநேகமாகி
விடுபவள்....!

மற்றவர்களைப் போல
அவளுக்கு
அவ்வளவாக
கதைக்க, சிரிக்க
தெரியாது தான்...
ஆனால், எதையும் படிக்கவோ, ரசிக்கவோ
தெரியாதவள் அல்ல...
தன்னை விலக்கி வைக்கும் அளவிற்கு..
எதற்கும் தகுதியில்லை என
ஓர் ஓரமாய்
இவ்வுலகை ரசித்து விட்டு கடந்து செல்பவள்
அவள்...!

விலையுயர்ந்த தங்கம் மீதெல்லாம்
ஆசை இல்லை அவளுக்கு...
திரும்பும் பக்கமெல்லாம்
தனக்கு மட்டுமே உரிமையான
புத்தகங்கள் இருக்க வேண்டும் என்ற சிறு
பேராசை தான்....!

**பாலகி**

## கவிதைப் போட்டியின் வெற்றியாளர்கள் பாராட்டி கௌரவிப்பு

....................

துணிந்தெழு சஞ்சிகையினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இலங்கையின் நாலா புறமிருந்தும் 350க்கும் மேற்பட்ட கவிதைகள் கிடைக்கப்பெற்றன. இவற்றில், விதிமுறைகளுக்கு உட்பட்டு தலைப்புக்கு ஏற்ற வகையில் மிகப் பொருத்தமான 26 கவிதைகள் நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

வெற்றியாளர்கள் அனைவரும் ஒக்டோபர் 19ஆம் திகதி நடைபெற்ற ஸ்கை தமிழ் விருது விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
Thuninthelu Magazine
மாதந்தோறும் | இதழ் - 36 | 30 ஒக்டோபர் 2024

# தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" நூல் வெளியீடு

தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" என்ற கவிதை நூலானது கடந்த வாரம் 2024.10.13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தோப்பூர், தி/மு/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் அனுசரணையோடு மிகவும் விமரிசையாக நடைபெற்றது.



ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான எம். எல். பௌசுல் அமீர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. ஹாஜா முகைதீன் அவர்கள் கலந்து கொண்டதோடு, முதல் பிரதியை பிரபல தொழிலதிபரும் அல் - மஸ்ஜிதுல் பலாஹ் ஜூம்ஆ பள்ளியின் தலைவருமான எஸ். எச். ஜெஸாஹீர் பெற்றுக்கொண்டார். ஏ. ஆர். அன்சார் ஆசிரியரின் காத்திரமான திட்டமிடல் மற்றும் பங்களிப்புக்களோடு, மைத்துனர் ஐ. எம். ஷுக்ரி அவர்களின் நிதியுதவியோடு ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டதாரியான ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய இந்நூலானது தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் மூன்றாவது வெளியீடாகும்.





குடும்பத்தாரின் பூரண ஒத்துழைப்போடு இடம்பெற்ற இந் நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மூத்த கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், ஊர் நண்பர்கள் மற்றும் நளீமிய்யா நண்பர்கள் போன்ற பலரும் கலந்துகொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# பேசும் பேனாக்கள்

## பேசும் பேனாக்கள் பக்கத்தின் ஊடாக துணிந்தெழு சஞ்சிகையின் 38 ஆவது இதழில் வாசகர்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி.

வாசகர்கள் இல்லாமல் படைப்பாளி கிடையாது எங்களுடைய ஒவ்வொரு அடுத்த கட்ட நகர்வுக்கு பின்னாலும் வாசகர்களாகிய உங்களது தீராத வாசிப்பு மற்றும் பின்னூட்டங்கள் பாரியளவில் செல்வாக்கு செலுத்துவதை ஒருபோதும் மறுத்து விடவும் முடியாது.

அதனால் தான் வாசகர்களே! துணிந்தெழு சஞ்சிகை மாதம் தோறும் "பேசும் பேனாக்கள்" பக்கத்தின் ஊடாக சுவாரஸ்யமான புத்தகங்கள் பற்றிய தகவல்களை உங்களுக்குத் தருகிறது. அதில் சென்ற வாரமும் சில நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இவை தொடர்பான கருத்துக்கள் வாசகர்களாகிய உங்களது பின்னூட்டங்கள் இன்னும் உந்துசக்தியாக அமைந்திருந்தன.

நீங்களும் உங்களுடைய புத்தகங்களை எமக்கு அனுப்பி வைத்து புத்தகங்கள் பற்றிய அறிமுகங்களை எமது பக்கத்தின் ஊடாக வாசகர்களுக்கு தெரியப்படுத்தலாம் அல்லது உங்களுடைய பிரதேசத்தில் நடைபெறுகின்ற புத்தக வெளியீடுகள் பற்றிய தகவல்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

இந்த மாதமும் உங்களோடு எனது அனுபவப் பகிர்வாக சில புத்தகங்களை அறிமுகம் செய்து வைக்கிறேன். எனது அறிமுக உரையை படித்துவிட்டு, அந்த புத்தகங்களை நீங்கள் வாசித்து உங்களது அனுபவப் பகிர்வுகளை எழுதி அனுப்புங்கள்.

முகவரி :- துணிந்தெழு சஞ்சிகை,
பேசும் பேனாக்கள் பகுதி,
எம். ஜே. ஜவ்ஸன் அஹமட்,
148,வீசி வீதி பெரிய,
நீலாவணை 02
0760200387 I jawsan490@gmail.com

இந்த மாதம் எங்கு அறிமுகம் செய்யப்படுகின்ற நூல்கள் மூதூர் ஜே. எம். ஐ. பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வெளியீடாக அண்மையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டவை.

இளம் எழுத்தாளர்களின் கனவுகளை நினவாக்கும் முயற்சியில் பாரியளவில் பங்களிப்புச் செய்யும் இவர்களது படைப்பாக்க செயற்பாடுகள் வெளிவரும் நூல்கள் மிக காத்திரமானவை அத்தோடு, சமூகத்தின் தேவை என்பதே நிஜம்.

இவ்வாறு பயன் தரும் நூல்களை துணிந்தெழு சஞ்சிகையில் அறிமுகம் செய்வதில் துணிந்தெழு சஞ்சிகை பெருமிதம் கொள்கிறது.

"வாசிப்பவர்கள் எல்லாம் தலைவர்கள் அல்ல. ஆனால், தலைவர்கள் எல்லாம் தினமும் வாசிப்பவர்களாகவே இருக்கிறார்கள்." [ஹாரி ட்ரூமன்]

01. **நூல்** :- **டுவன்டி_ப்ளஸ்_20+**
**நூலாசியர்** - **பைஸானா பைரூஸ்**
**வகை** - **கவிதைத் தொகுப்பு**
**வெளியீடு** - **மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்.**
**வெளியீடு** - 31 **பக்கம்** - 125 **ஆண்டு** - 2024.**ஜூன்**
**தொடர்புகளிற்கு** - 0769118074 **விலை** - 500.00

**நூல் குறிப்பு**: தன்னெழுச்சியூட்டி தன்னம்பிக்கைகள் சுமந்து வரும் கவிதைத் தொகுப்பு நூலே இந்த "டுவன்டி ப்ளஸ்..." இளைஞர், யுவதிகளை இலட்சியத்தின் பால் ஒன்று சேர்த்திடும் இலக்கியப் புதுமையோடு எழுதப்பட்டுள்ள நூலாசியர் பைஸானா அவர்களின் கன்னி வெளியீடாக இதனை

கருதமுடியும். ஒவ்வொரு வாசக நெஞ்சிலும் எதாவது ஓர் எழுச்சியை உண்டு பண்ணி, எங்கோ ஒரு மூலையில் சாதிக்கத் தூண்டும் சமான்யனுக்காகவே எழுதப்பட்டள்ளது. எழுச்சியுரும் எதிர்கால இளைஞர்கள் ஒவ்வொருவரின் கரத்திலும் தவழ வேண்டிய நூல் இது.

நூலாசியர் பற்றி: பைஸானா பைரூஸ் புழுதிவயல் புத்தளத்தை பிறப்பிடமாகக்கொண்டவர். இஸ்லாஹிய்யா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியும் தற்போது இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகம் கலை கலாசார பீடத்தில் முதலாம் வருட கற்கை மாணவராகவும் கல்வி கற்று வருகின்றார்.

02. **நூல்** :- **மௌன மொழிகள்**
**ஆசிரியர்** - **பெனாஷில் ஷிப்னா**
**வகை** - **கவிதைத் தொகுப்பு**
**வெளியீடு** - **ஸ்கை தமிழ் பதிப்பகம்**
**பதிப்பு** - **மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்.**
**நூல் வெளியீடும்** - 36 **பக்கம்** - 96
**ஆண்டு** - 2024.ஜூலை **தொடர்புகளுக்கு** - 0750405104
**விலை** - 500.00

நூல் குறிப்பு :- துணிந்தெழு சஞ்சிகையில் ஆசிரியர் குழாமில் ஒருவரான நூலாசியர் பெனாஷில் ஷிப்னா அவர்களின் 8ஆவது கவிதைத் தொகுதியாக வெளிவந்துள்ளது "மௌன மொழிகள்". 50 கவிதைகளை உள்ளடக்கிய புதுக்கவிதை தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

நூலாசிரியர் பெனாஷில் ஷிப்னா அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவராக இருப்பதோடு, ஏறாவூர் கலை இலக்கிய செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டுவரும் வளர்ந்துவரும் ஓர் பெண் ஆளுமை.

ஸ்கை தமிழ் பதிப்பகத்தின் இவ்வாண்டுக்கான வெளியீடாக வெளிவந்துள்ள "மௌன மொழிகள்" கவிதைத் தொகுதி புதிதாக எழுத்து துறையில் கால்பதிக்கும் இளம் எழுத்தாளர்களுக்கு சிறந்த வழிகாட்டி நூலக அமையும்.

03. **நூல்** :- **இதுவும்_கடந்து_போகும்**
**ஆசிரியர்** - **இஷ்ரா இர்பான்**
**வகை** - **குறுநாவல்**
**பதிப்பு** - **மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்.**
**வெளியீடும்** - 39 **பக்கம்** - 55 **ஆண்டு** - 2024. September
**தொடர்புகளுக்கு** - 0714411587 **விலை** - 400.00

நூல் குறிப்பு :- இர்பான் பாத்திமா இஷ்ரா என்ற தரம் 10இல் கற்றுவரும் இவ்விளம் கதாசிரியர் தனது சிறு வயது முதலே கல்விசார் அபிவிருத்தி செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதுடன் அமைதி. ஒழுக்கம். கட்டுப்பாடு போன்ற மானுட பண்புகளில் சிறந்து விளங்கிவரக்கூடியவர். அவரின் சொந்த முயற்சியின் வெளிப்பாடே இச்சிறுகதையாகும். இலக்கிய ரசனையுடன் எழுதப்பட்டுள்ள இது கருத்தாழமிக்க விடயங்களையும், உணர்வூட்டும் புத்திமதிகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது இதன் மேலதிக சிறப்பம்சமாகும்.

இச்சிறுகதையை வாசிக்கக்கூடிய ஒவ்வொருவரையும் சிறந்த பண்பாட்டை நோக்கி வழிகாட்டக் கூடியதாக இது அமைந்திருக்கிறது. இக்கதையை முழுமையாக பல தடவை வாசித்துள்ளேன். அதன் ஒவ்வொரு கட்டமும் சுவாரஸீயமாக இருந்ததுடன் மேற்கொண்டு வாசிக்கத் தூண்டிக்கொண்டேயிருந்தது.

இக்கதையின் முடிவு எப்படி அமையப்போகுதோ என்ற ஏக்கப் பெருமூச்சு இடைக்கிடை என்னுள் வெளியாகிக்கொண்டிருந்ததை மறக்கமுடியாது. இவ்வாறானதொரு ஆழமான கருத்துக்களைக் கொண்ட இக்கதையை எழுதும் அளவுக்கு அவர் முதிர்ச்சி அடைந்துள்ளாரா? என்று பலபோது என்னை சிந்திக்கத் தூண்டியுள்ளது. அவ்வளவு தூரம் அழகான, நேர்த்தியான அமைப்பில் இதன் ஒவ்வொரு நிகழ்வும் கட்டமைக்கப்பட்டிருந்தது.

04. **நூல்** :- **மரக்கல_மீகாமன்**
**ரொபர்ட் நொக்ஸ் இன் வரலாற்று புனைகதை**
**ஆசிரியர்** - **பர்ஹான் முஸ்தபா**
**வெளியீடு** - NEWS Organaization
**வகை** - **வரலாற்று புனைகதை**
**பக்கம்** - 172 **ஆண்டு** - 2024.September
**தொடர்புகளுக்கு** - 0774266676
**விலை** - 700.00 **பதிப்பு** - 40

நூல் குறிப்பு :- ரொபர்ட் நொக்ஸ் அவர்கள் தான் இலங்கையில் சுதந்திர சிறைக்கைதியாக இருந்து அனுபவித்த மற்றும் கற்றுக்கொண்ட அனுபவங்களை கொண்டு வெளியிட்ட சுயசரிதை நூலான An Historical Relation of the Island Ceylon என்ற நூலை அடிப்படையாக்கொண்டு பர்ஹான் முஸ்தபா அவர்கள் எழுதிய நூலே மரக்கல மீகாமன்.

வரலாற்று புனைகதையாக இருந்தாலும் இந்நூலில் மிகையூட்டப்பட்ட வர்ணனையை காண முடியாது.

உண்மைச் சம்பவங்களை சுவாரஷ்யமாக வாசகர்களுக்கு அலுப்பை உண்டாக்கிடாமல் ரசனையோடு வரலாற்றை இந்நூலினூடாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

நூலாசியர் பற்றி:- பர்ஹான் முஸ்தபா தொழில் நிமிர்த்தம் வெளிநாட்டில் இருந்தாலும் அவர் தனது ஊரான மூதூர் மீது அதீத ஈடுபாடு கொண்டவர். சமூக சிந்தனை கொண்ட இவர், மூதூரின் வரலாற்று பக்கத்தின் முக்கியமான தகவல்களை முகநூலின் வாயிலாக ஆவணப்படுத்தி வருகின்றார். அந்த வகையில் கன்னி வெளியீடாக வெளிவந்த மரக்கல மீகாமன் நூலும் மேற்குறித்த அவரின் எழுத்துக்கான சான்றாகும்.

**05 நூல்** :- **ஆலமரம்**
**ஆசிரியர்** - **அஸ்மா டீன்**
**வெளியீடு** - **மூதூர் ஜே.எம்.ஐ பப்ளிகேசன்**
**வெளியீடும்** - **42 வகை** - **சமூக நாவல்**
**பக்கம்** - **164 ஆண்டு** - **2024.September**
**தொடர்புகளுக்கு** - **0773007730**
**விலை** - **700.00**

நூல் குறிப்பு:- சமூகத்தின் கட்டமைப்பு ஆக்க அலகாக காணப்படும் குடும்பம் மற்றும் அதன் உறவுமுறைகள் தொடர்பாக எழுதப்பட்ட ஒரு சமூக நாவலாக ஆலமரத்தை வகைப்படுத்தலாம்.

ஆலமரம் ஒன்றின் விழுதுகள் குறித்த ஆலமரத்தின் முதிர்ச்சியை பொறுத்து வேறுபடும். அதுபோலவே குடும்பத்தின் உறவுகளும் என்று தெளிவூட்டும் நாவலாக இது அமைந்துள்ளது.

நூலாசியர் பற்றி :- 'ஆலமரம்' சமூக நாவல் படைத்த அஸ்மா தீன் கம்பளையைச் சேர்ந்தவர். மர்ஹூம் கே.எம். அன்வரஷா ஆயிஷா உம்மா தம்பதியினரின் புதல்வியும் அல்ஹாஜ் மொஹமட் தீனின் மனைவியுமான இவர், இலங்கையின் முதல் தமிழ் தினசரி 'தினதபால்' தந்த மீரான் மொஹித்தீன் அவர்களின்மகன் வழி பேத்தியும் ஆவார்.

கவிதை, கட்டுரை சிறுகதை, நாடகப்பிரதி போன்ற இலக்கிய வடிவங்களை படைக்கும் இவர் 1984ல் தினகரன் பத்திரிகை சிறுவர் பகுதியின் மூலம் இலக்கிய பரப்பில் பிரவேசம் செய்தவர்.

தகவல்கள்

**நெறிப்படுத்தல் மற்றும்**
**ஆக்க வெளியீடு**
**எம். ஜே . ஜவ்ஸன் அஹமட்**
**துணிந்தெழு சஞ்சிகை.**








# ஜனாதிபதி ஊடக விருதுகள் 2024 - விண்ணப்ப கால எல்லை நீடிப்பு..

2024 ஜனாதிபதி ஊடக விருதுகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி நவம்பர் 05 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் சிறந்ததொரு ஊடகக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், ஊடகவியலாளர்களின் பணியை பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சினால் இரண்டாவது முறையாக நடத்தப்படும் ஜனாதிபதி ஊடக விருதுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2024.10.30 என்று குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், அத்திகதி 2024.11.05 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சினால் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை 2024 நவம்பர் மாதம் 05ஆம் திகதி பிற்பகல் 4.00 மணி வரை சமர்ப்பிக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முக்கிய அறிவிப்பு


## வாழ்த்துக்கள்

எமது துணிந்தெழு சஞ்சிகையின் **புதிய பிரதம ஆசிரியராக** எம்.எஸ்.எம்.ஸாகிர் அவர்களை நியமித்திருக்கின்றோம் என்பதை அறியத் தருகின்றோம். இவர் நவமணி பத்திரிகையில் பத்து வருடங்கள் பணியாற்றியுள்ளார்.



கடந்த 2022.01.07ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஒருங்கிணைப்பாளராக கடமைகளை ஏற்று ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பிராந்திய முகாமையாளராகவும், துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றிய சகோதரி சிஹானா நௌபர், அவருடைய சுய விருப்பத்தின் பேரில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் **சகல பதவிகளில் இருந்தும் இடைவிலகிக் கொண்டார்**.

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகைக்கு, சகோதரி சிஹானா நௌபர் ஆற்றிய பணிகள் அளப்பெரியவை. எங்கள் வெற்றிப் பயணத்திற்கு அவரின் சிறந்த பங்களிப்பு மகத்தானது. எனவே, அவருக்கு எங்கள் ஊடகம் சார்பாக நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249



#Thuninthelu www.skytamilnews.com